**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 9-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 2-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி உதவியாளர் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **செல்வம்** | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**30.1.2024 OS No.11/2020 வா.சா.2 செல்வம் ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

6. எங்கள் அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர்கள் அனைவரும் விலங்கருப்பணசாமியை கும்பிடுவோம். விலங்கருப்பணசாமிக்கு வடக்கேயும், தெற்கேயும் தனசேகர் என்பவர் இருக்கிறார் என்றால் சரிதான். தனசேகர் என்பவருக்கு பாத்தியமான சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா கோவிலுக்கு வடக்கேயும், தெற்கேயும் ஹரிஜனசமூகத்தை சேர்ந்த பாக்கியம், பிச்சை ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள்தான் உள்ளது என்றாலும், நான் சொல்வதுபோல் தனசேகர் என்பவரது சொத்து இல்லை என்றாலும் சரியல்ல. கோவில் சொத்தைதான் பிச்சை, பாக்கியம் அவர்களது பெயரில் மாற்றியுள்ளார்கள்.

7. பிச்சை, பாக்கியம் பெயரில் மாற்றப்பட்டு 50 வருடம் இருக்குமா என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் பிச்சை, பாக்கியம் ஆகியோர்களுக்கு பூர்விக பாத்தியப்பட்டு சொத்து என்றாலும், கோவில் சொத்து இல்லை என்றாலும் சரியல்ல. கோவிலுக்கு தாவா சொத்தை கொடுத்ததாக நான் சொல்லியிருப்பதில் யார் எப்போது கோவிலுக்கு சொத்தை விட்டார்கள் என்றால் எங்களது முன்னோர்கள் பாட்டன், பூட்டன் காலத்தில் விட்டார்கள். வருடம் தெரியாது. துாதை கிராமம் எங்களுக்கு பூர்விககிராமம் இல்லை என்றாலும், நாங்கள் வேலுார்முருகபாஞ்சான் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்றாலும் சரியல்ல.

8. நான் முனியாண்டி கோவில் பூசாரி என்றால் சரிதான். தாவா விலங்குகருப்பணசாமி கோவிலில் ஹரிஜனசமூகத்தைச் சேர்ந்த இவ்வழக்கின் 1-ம் பிரதிவாதி பூசாரியாக உள்ளார் என்றால் சரிதான். முனியாண்டி கோவில் அகமுடையார் ச மூகத்தைச் சேர்ந்தவர்கள் பூசாரியாக உள்ளோம் என்றாலும், விலங்ககருப்பணசாமி கோவிலுக்கு ஹரிஜனசமூகத்தைச் சேர்ந்தவர்கள் பூசாரியாக உள்ளார்கள் என்றாலும் சரிதான். விலங்ககருப்பணசாமி கோவிலில் எங்களுக்கு சாமி கும்பிட மட்டும்தான் உரிமை உள்ளது என்றாலும், வேறு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

9. விலங்ககருப்பணசாமி கோவில் சம்மந்தப்பட்ட பூஜைபொருட்கள்,

சாமியாடுவதற்கு தேவையான பொருட்கள் பூசாரியிடமே உள்ளது என்றால் பொங்கல் பானை மட்டும்தான் பூசாரியிடம் உள்ளது. மற்றவை எங்களிடம்தான் உள்ளது. பூஜை பொருட்கள் வைக்க பூஜை பெட்டி உள்ளது என்றால் சரிதான். கோவில் பூஜை சாமான்கள் வைக்க தனியாக ஊருக்குள் ஒரு அறை கட்டி அதற்குள் பூஜை பெட்டி வைத்துள்ளோம்.

10. கோவில் பூஜை சாமான்கள் வைக்க தனியாக ஊருக்குள் ஒரு அறை கட்டி அதற்குள் பூஜை சாமான்கள் வைக்கப்படவில்லை என்றாலும், பூசாரியிடம்தான் உள்ளது என்றாலும் சரியல்ல. எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு விலங்ககருப்பணசாமி என்ற பெயர் வைக்கப்படுமா என்றால் என் மகளுக்கு விலங்கீஸ்வரி என்றும், என் இன்னொரு மகளுக்கு வினோதினி என்றும் வைத்துள்ளோம். என் மகள் விலங்கீஸ்வரி என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான். தாவா விலங்ககருப்பணசாமி கோவிலில் பொங்கல் பூசாரிதான் வைப்பார் என்றால் சரிதான்.

11.விலங்ககருப்பணசாமி கோவிலில் பொங்கல் வைத்து வழிபடுவதில் பொங்கல் பிரசாதம் நாங்கள் வாங்கமாட்டோம் என்றால் வாங்குவோம். இதுவரை நாங்கள் பொங்கல் பிரசாதத்தை பெற்றுக்கொண்டதில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. விலங்ககருப்பணசாமி கோவிலில் அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கோ, யாதவ சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கோ தனிப்பட்ட உரிமை எதுவும் இல்லை என்றாலும், அகமுடையார், யாதவ சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சாமியாடியாக இருந்ததில்லை என்றாலும் சரியல்ல.

12. தாவா விலங்ககருப்பணசாமி கோவில் 1,2 பிரதிவாதிகளான ஹரிஜனச மூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. எங்களுக்கு பாத்தியப்பட்டது ஆகும். அதனால்தான் விலங்ககருப்பணசாமி கோவிலுக்கு 1,2 பிரதிவாதிகளான ஹரிஜனசமூகத்தைச் சேர்ந்தவர்கள் பரம்பரை பூசாரியாக இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனடிப்படையில்தான் சாமியாடி, கரகம் எடுத்து, பொங்கல்வைத்து, பூசைப்பெட்டி வைத்து வழிபாடு செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தொன்றுதொட்டு பரம்பரையாக வழிபாடு செய்து வருவதை நாங்களும், யாதவச மூகத்தைச் சேர்ந்த ஒரு சிலரும் சேர்ந்து வட்டாட்சியரிடம் மனு கொடுத்து உரிமையை தடுக்க முயற்சி செய்தோம் என்றால் மனு கொடுத்தோம். அவர்கள் எங்களை வழிபாடு செய்யவிடவில்லை. எனவே நாங்கள் மனு கொடுத்தோம்.

13. நாங்கள் அரசு அதிகாரிகளை பயன்படுத்தி எங்களுக்கு இல்லாத உரிமையை பெற முயற்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தனசேகரன் சொல்லியதன் அடிப்படையில்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தனசேகரன் சொல்லியதன் அடிப்படையில் சாட்சி சொல்லவந்துள்ளேன் என்றால் நான், தனசேகரன்,

கருப்புசாமி, மனோகரன், குமார் சேர்ந்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். செல்வம் ஆகிய நான் இந்தவழக்கில் 2-ம் வாதி ஆவேன். இவ்வழக்கில் கட்சிக்காரர் இல்லை என்றாலும், தனசேகரன் சொல்லியதன் அடிப்படையில் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.